# ஓசூரில் ஆச்சாரியாருக்குக் கறுப்புக் கொடி.

## போலீஸ் பந்தோபஸ்தில் பொதுக் கூட்டம்

(ஒரு நிருபர்)

ஓசூர், ஜூன் 8,

7-6-38 காலை 7 மணிக்கு சுமார் 200 கறுப்புக்கொடிகளைத் தாங்கி ஜஸ்டிஸ் சுயமரியாதைக் காட்சித் தொண்டர்களும், முஸ்லிம் லீக் தொண்டர்களும், ஹெச். என். விநாயகம், மகம்மது ஷரீப், செட்டியண்ண கவுண்டர், வேணுகோபால் முதலியவர்களின் தலைமையில் ஒரு பெரிய ஊர்வலம் கோஷங்களுடன் வந்த பின்பு ஊருக்கு ஒரு மைல் தூரத்தில் ஆச்சாரியார் வரும் வழியில் வரிசையாக நின்று காத்துக்கொண்டிருந்தார்கள்.

மந்திரி ஆச்சாரி அவர்கள் மோட்டார்கார் அருகில் வந்தவுடன் பெரிய சப்தத்துடன் திரும்பிபோ' என்றும் 'ஹிந்திசாணாகதி மந்திரி சபை ஒழிக'' என்றும் ''அக்ரார ஆட்சி ஒழிக'' என்றும் சப்தம் செய்து காருக்கு பின் பாக மறுபடியும் கோஷங்களுடன் வந்து பொது கூட்டம் கூடும் இடத்தில் கறுப்புக்கொடிகளைத் தாங்கிகாத்துக்கொண்டு இருந்ததுடன் பொதுக் கூட்டம் கூடும் இடம் சுற்றிலும் கறுப்புக் கொடிகளைக் கூரைகளின் மேலும், மரக்கிளைகளிலும் கட்டி விட்டார்கள்.

கொஞ்சநேரம் ஓய்விற்குபின்பு மந்திரியார் பொதுக்கூட்டம் கூடும் இடத்தின் அருகில் வந்தவுடன் மறுபடியும் வானைப் பிளக்க சப்தம் செய்தவுடன் மந்திரியார் காரைவிட்டு இறங்கி வந்து இருகையாலும் கும்பிட்டு தான் ஹிந்தி விஷயமாய் கவனிப்பதாகச் சொல்லி பிரசங்கம் செய்யும் இடத்தில்சென்று ½ மணிநேரம் கூடபேச முடியாமலும் அருகில் இருந்தவர்கள் கூட கேட்கமுடியாத அவ்வளவு ஈனசுரத்துடனும் மனக்கஷ்டத்துடனும் இரண்டொருவார்த்தை மதுவிலக்கு விஷயமாய்ப் பேசி முடித்துவிட்டு கூட்டத்தை கலைத்துவிட்டு போய்விட்டார்.

சுமார் 25 கான்ஸ்டேபில்கள் சற்றுக்காவலில் பேசியது பார்க்கிறவர்களுக்கு ஆச்சாரியார்பயங்காளித்தனத்தைக் காட்டியது. கூட்டத்தில் 300 ஜனங்கள் கூட இல்லை.

வீதிகளிலும் கடைபஜாரிலும் ஒவ்வொரு கடைகளிலும கருப்புக் காடிகளால் கட்டப்பாட்டிருந்தது ஊரே கறுப்பு மயமாய் தோன்றியது.

இவ்வூர் சப்இன்ஸ்பெக்டர் முதல் நாளே ஜஸ்டிஸ் முஸ்லீம் லீக் மெம்பர்களை அழைத்து கறுப்புக் கொடி பிடிக்கக் கூடாது என்று மிரட்டியும், உருட்டியும் அவமரியாதையாய் பேசியும்கூட கொஞ்சமும் பின் வாங்காமல் பொதுஜனங்களும், ஜஸ்டிஸ், லீக் மெம்பர்களும் நடந்து கொண்டது பாராட்டத்தக்க விஷயம். இவ்வளவு பெரிய கறுப்புக்கொடி ஊர்வலக் காக்ஷி இவ்வூரில் இதுவரையில் நடந்ததேகிடையாது. இதனால் பொது ஜனங்கள் காங்கரஸ் வண்டவாளங்களை பூராவும் அறிந்து கொண்டார்கள். கக்ஷிக்கு சம்மந்தமற்றவர்கள் கூட ஆச்சாரியாரை கேள்விகள் சரமாரியாய் கேட்டது பாராட்டத்தக்கது.